சிந்து சமவெளி நாகரிகம் – திராவிட நாகரிகமே எனும்

# தொன்மை வரலாற்றை வெளிப்படுத்திய அகழராய்வு நூற்றாண்டு!

## ‘விடுதலை’ நாளேட்டில் தலையங்கம்!

சென்னை மே, 18 -

சிந்து சமவெளி அகழ் ஆய்வை நடத்தி, அது திராவிட நாகரிகமே என தக்க சான்றுகளுடன் வரலாற்றை வெளிப்படுத்திய சர்.ஜான் மார்ஷலின் ஆய்வு நூற்றாண்டை திராவிடர் சார்பில் கொண்டாடுவது குறித்து விடுதலை நாளேடு தலையங்கம் 17.5.2023 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

ஈரோட்டில் கடந்த 13ஆம் தேதி நடைபெற்ற திராவிடர் கழகப் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தில் ஒரு முக்கிய அம்சம் சிந்து சமவெளி அகழ் ஆய்வுகள் மூலம் திராவிடர்களின் தொன்மை வரலாற்றை வெளிப்படுத்திய சர். ஜான் மார்ஷலின் ஆய்வு நூற்றாண்டைக் கொண்டாடுவது பற்றியதாகும்.

சர். ஜான் மார்ஷல் 1913இல் தட்சசீலத்தில் முதலில் தொல்லியல் அகழ் ஆய்வுகளை மேற்கொண்டார். 1918இல் தொல்லியல் அகழ் ஆய்வில் கண்டெடுத்த தொல்பொருட்களைக் கொண்டு தட்சசீலத் தில் தொல்லியல் அருங்காட்சியகத்தை அமைத்தார். பின்னர் சாஞ்சி மற்றும் சாரநாத் பவுத்த தொல்லியல் களங்களில் அகழ் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

ஜான் மார்ஷல், சிந்துவெளி நாகரிகம் மற்றும் மவுரியப் பேரரசர் அசோகர் காலம் குறித்தான ஆவணங்களை ஆதாரங்களுடன் வெளியிட்டார். இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தின் முதல் தலைமை இயக்குநரான அலெக்சாண்டர் கன்னிங்காமின் வழிகாட்டுதலின்படி ஜான் மார்ஷல், 1920இல் அரப்பா மற்றும் மொகஞ்சதாரோவில் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) அகழாய்வுகள் மேற்கொண்டார்.

சிந்துவெளிப் பண்பாட்டை ஆய்வாளர் ஜான் மார்ஷல் உலகிற்கு அறிவித்த நாள் செப்டம்பர் 20, 1924; ஜான் மார்ஷல் 1902ஆம் ஆண்டு துவங்கி 1928ஆம் ஆண்டு வரையில் பிரிட்டிஷ் இந்தியா அரசாங்கத்தின் தொல்லியல் ஆய்வகத்தின் தலைமை இயக்குநராக இருந்தார். இவர்தான் அரப்பா மற்றும் மொகஞ்சதாரோ தொல்லியல் களங்களில் அகழ் ஆய்வுகளை மேற்கொண்டு உலகிற்கு அறிவித்தவர்.

ஜான் மார்ஷல் மொகஞ்சதாரோ மற்றும் அரப்பா எனும் இரண்டு இடங்களில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளின் கூறுகளை ஒருங்கிணைத்து ஆய்வு செய்து, இந்த இரண்டு நாகரிகங்களும் ஒரே மாதிரியாக இருப்பதைக் கண்டறிந்தார். மேலும் இது திராவிட மொழிக் குடும்பத்தின் நாகரிகமே, வேத நாகரிகத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதையும் தெரிவித்தார். வேத காலத்தை விட 1500 ஆண்டுகள் பழைமையான நாகரிகம் இது என்பதையும் ஜான் மார்ஷல் நிரூபித்தார்.

தொல்லியல் துறை தலைவராக இருந்த அலெக்சாண்டர் கன்னிங்காம் (Alexander Cunningham 185356) தான் முதன் முதலில் சிந்து சமவெளி ஆய்வைத் தொடங்கி வைத்தார். இந்த ஆய்வை அவர் தொடங்கியதற்கு முக்கிய காரணம் அவருக்கு பவுத்தத்தின் தொன்மம் குறித்து இருந்த தேடலே ஆகும். பவுத்தத்தின் தொன்மங்களைத் தேடிப் புறப்பட்டவர்களின் விடையாகவே சிந்துவெளி நாகரிகம் நமக்குக் கிடைத்தது. மேலும் சிந்துவெளியானது ஒன்றரை மில்லியன் சதுர கிலோமீட்டர் கொண்ட பரப்பளவிலான பெரிய நாகரிகமாகும். இந்த நாகரிகம் கி.மு 2600ஆம் ஆண்டு தொடங்கி கி.மு 2500 2000 ஆண்டுகளில் முதிர்ச்சி அடைந்தது

சிந்துவெளி நாகரிகம் செம்புக் காலத்தைச் சேர்ந்தது. சிவப்பு கருப்பு மற்றும் கருப்பு சிவப்பு மண்பாண்டங்கள் கிடைத்துள்ளன. மூடப்பட்ட கழிவுநீர் கால்வாய்கள், தார் கொண்டு தண்ணீர் கசிவைத் தடுத்து, கட்டமைக்கப்பட்ட பெரிய குளம், பொது தானியக் களஞ்சியம் இருப்பது என்பன இந்த நாகரிகத்தில் உபரி கிடைத்ததற்கான சான்றாக அமைந்துள்ளன. களிபங்கன் எனும் இடத்தில் நடைபெற்ற அகழ் ஆய்வில் கிணற்றுக்காக செய்யப்பட்ட செங்கற்கள் மண் மற்றும் செம்பினால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள் கிடைக்கப் பெற்றன.

“தொடக்கக் கால இந்தியர்கள்” என்ற நூல் டோனி ஜோசப் என்பவரால் எழுதப் பட்டது (2018). அதில் அவர் கூறியிருக்கும் முக்கிய ஆய்வு: அரப்பா நாகரிகத்தில் பேசப் பட்ட திராவிட மொழிகள் பற்றிய சமீபத்திய அறிக்கை மரபணு ஆய்வுக்கு இணங்குகிறது என்று கூறுகிறது. சமஸ்கிருத ஆரிய வேதக் கலாச்சாரம் அரப்பா நாகரிகத்திற்குப் பிறகு வந்தது என்றும் கூறியுள்ளார்.

சிந்துச் சமவெளியில் உள்ள 600 ஊர்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களேயாகும். கீழடி அகழ் ஆய்வுக்குப் பிறகு தமிழ் மொழிக்கும், சிந்து சமவெளிக்கும் இடையிலான தமிழ் திராவிட உறவு மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. வெளியிலிருந்து இந்நாட்டுக்குள் பிழைக்க வந்த ஆரியர்களின் படையெடுப்பு சிந்து சமவெளி அழிவுக்கு முக்கிய காரணமாகும். “இந்திய வரலாறு ஒரு மார்க்சிய கண்ணோட்டம்!” எனும் நூலை எழுதிய ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாத் சிந்து சமவெளியில் இருந்த அணைகளை ஆரியர்கள் உடைத்தனர் என்று எழுதுகிறார்.

வாஜ்பேயி பிரதமராக இருந்த காலத்தில் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த (கல்வி) முரளி மனோகர் ஜோஷி ஒரு தந்திரத்தைச் செய்தார். சிந்து சமவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே என்பதற்கான சூழ்ச்சிதான் அது; சிந்து சமவெளி அகழ் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட காளை உருவச் சின்னத்தை ‘மார்பிங்’ செய்து குதிரையாக மாற்றினார்கள். காரணம் குதிரை என்பது ஆரியர்களின் சின்னம் என்பதால்.

ஆரியர்களின் மேலாதிக்கத்துக்கு சவால்கள் எழுந்துள்ள இந்தக் காலகட்டத்தில், ஆரியப் பார்ப்பனர்கள் என்ன சொல்ல ஆரம்பித்துள்ளனர்? ஆரியர் திராவிடர் என்பது எல்லாம் வெறும் கட்டுக்கதை, வெள்ளைக்காரார்களின் பிரித்தாளும் சூழ்ச்சி என்று பேச ஆரம்பிக்கவில்லையா?

தந்தை பெரியார் உறுதியாகக் கூறியதுபோல் “நாட்டில் நடப்பது வெறும் அரசியல் அல்ல; ஆரியர் திராவிடர் போராட்டமே” என்றார். அதுதானே இன்றைய பிஜேபி தலைமையிலான ஆட்சியின் உண்மைத் தன்மை. இந்த நிலையில் சிந்து சமவெளி ஆய்வை நடத்தி, அது திராவிட நாகரிகமே என்று தக்க தரவுகளுடனும், சான்றுகளுடனும் நிரூபித்த வகையில் அதன் நூற்றாண்டு 2024இல் வருவதால், திராவிட இயக்கமான திராவிடர் கழகம் தனது பொதுக் குழுக் கூட்டத்தில், இதன் நூற்றாண்டைச் சிறப்பாக நடத்துவது என்று முடிவு செய்திருப்பது சாலப் பொருத்தம் தானே! இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள் திராவிடர்கள், அசாம் மக்களும் திராவிடர்களே என்று டாக்டர் அம்பேத்கர் உறுதிபடுத்தியதும் நோக்கத்தக்கதாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறுப்பட்டுள்ளது.

---

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால்

# இந்திய நாட்டிற்குப் பேரிடர்!

## ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கணவர் பரகலா பிரபாகர் விமர்சனம்

சென்னை, மே 18 -

**அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால் இந்திய நாட்டிற்குப் பேரிடர் ஏற்படும் என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகலா பிரபாகர் விமர்சித்துள்ளார்.**

இது குறித்து சமூக வலைதளங்களில் புதிய தலைமுறை தொலைக்காட்சி வெளியிட்ட செய்தி வைரலாகி வருகிறது.

அது வருமாறு: -

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாட்டுக்குப் பேரிடர் என பொருளாதார வல்லுநரும், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவருமான பரகலா பிரபாகர் விமர்சித்துள்ளார்.






அவர் எழுதிய “The Crooked Timber of New India - Essays on a Republic in Crisis” - என்ற புத்தகம் பெங்களூருவில் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் வளர்ச்சி, தூய்மையான நிர்வாகம் என்ற பெயரால் 2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதா அரசு அதனை கைவிட்டு, இந்துத்துவா ஆதிக்கத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிய தலைமுறை தொலைக்கட்சி வெளியிட்ட செய்தி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

---

எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணம்!

# திருமதி. என்.முத்தமிழ்ச் செல்விக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தெரிவித்தார்

**சென்னை, மே 18 -**

**எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் வெற்றி பெற்றிட திருமதி என். முத்தமிழ்ச்செல்வி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

இது குறித்து விவரம் வருமாறு:-

எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் 7200 மீட்டர் உயரத்தைக் கடந்து வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை திருமதி என். முத்தமிழ்ச் செல்வி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவரை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மேலும், எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தில் மீதமுள்ள தூரத்தையும் வெற்றிகரமாகக் கடந்து, எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த தமிழ்நாட்டின் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றிட தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதுடன், எவரெஸ்ட் சிகரத்தை அடையும் பயணத்தை வெற்றிகரமாக முடித்து தன்னை நேரில் சந்திக்க வருமாறும் முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

---

கோடை வெப்பத்தினால் ஏற்படும்

# பாதிப்புகளை எதிர்கொள்ள நடவடிக்கை!

## தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஆய்வு!

சென்னை, மே 18 -

அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தலைமையில் நேற்று (17.05.2023) தலைமைச் செயலகத்தில், தற்போது தமிழ்நாட்டில் நிலவிவரும் கோடை வெப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள, மேற்கொள்ளப் பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்தும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பல்வேறு துறை அரசு செயலாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தொழில் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பள்ளிக் கல்வி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மேற்கண்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் துறை ஆணையர் எஸ்.கே.பிரபாகர், பின்வருமாறு எடுத்துரைத்தார்.

கோடைகால கடுமையான வெப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க

### செய்ய வேண்டியவை

1.உடலின் நீர்ச்சத்து குறையாமல் பராமரிக்க, தேவையான அளவு தண்ணீர் குடிக்கவும்.

2.அவசியமான பணிகளுக்கு வீட்டை விட்டு வெளியே செல்லும்போது குடிநீரை கையுடன் எடுத்துச் செல்லுங்கள்.

3.ஓ.ஆர்.எஸ் (ORS), எலுமிச்சை ஜுஸ், இளநீர், மோர் மற்றும் பழச்சாறுகள் குடிக்கவும்.

4.இந்த பருவகாலத்தில் கிடைக்கும் பழங்கள், காய்கறிகள் மற்றும் வீட்டில் சமைத்த உணவை உண்ணுங்கள்.

5.நல்ல காற்றோட்டம் உள்ள மற்றும் வெப்பம் தணிந்த இடங்களில் இருக்கவும்.

6.மெல்லிய, தளர்வான பருத்தி ஆடைகளை அணியவும்.

7.வெளியில் செல்லும் போது காலணிகளை அணியவும். 8.மதிய நேரத்தில் வெளியே செல்லும் போது குடை கொண்டு செல்லவும்.

9.உடல் சோர்வாகவோ, மயக்கமாகவோ உணரும் பொழுது உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவும்.

### செய்யக் கூடாதவை

1.வெயில் காலங்களில் வெறுங்காலுடன் வெளியே செல்லாதீர்கள்.

2.சிறிய குழந்தைகள், கர்பிணிகள், முதியோர்கள் அதிக வெப்பத்தில், மதிய வேளையில் (12 மணி முதல் 3 மணி வரை) வெளியே செல்வதை தவிர்க்கவும்.

மேலும் இக்கூட்டத்தில், துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட குறித்தும் தலைமைச் செயலாளர் அவர்கள் விரிவான அறிவுரைகளை வழங்கினார். ஹ

இந்த அறிவுரைகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொகுத்து அனைத்து துறைகளுக்கும் வழங்க வேண்டும் என்றும், தொடர்ச்சியான ஆய்வுக் கூட்டங்கள் மூலம் இவை பின்பற்றப்படுகி ன்றனவா என்பதை கண்காணித்திட வேண்டியதன் அவசியத்தையும் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, எடுத்துரைத்தார்.

